RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s1965

OPEN ACCESS

# போகர் சித்தர் கூறும் மருந்துண்ணும் முறைகள்

**ரா. காந்திமதி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, நவரசம் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி அரச்சலூர், ஈரோடு- 638101, தமிழ்நாடு, இந்தியா

# Bogar Siddhar's Method of Eating Medicines

**R. Gandhimathi** [a, *]

[a] Department of Tamil, Navarasam Arts and Science College for Women, Arachalur, Erode-638101, Tamil Nadu, India

* Corresponding Author: phdgandhimathi@gmail.com

Received: 12-09-2022
Revised: 23-10-2022
Accepted: 01-11-2022
Published: 10-12-2022

**ABSTRACT**

Siddhars are individuals who has attained spiritual powers and they work various fields for the welfare of people. They have created many rare books in various fields like medicine, witchcraft, astrology, yoga, wisdom, alchemy etc. They also emphasized the principle of spiritual unity. Bogar is a well know siddhar. '7000' is one of his famous books, which consists of many ideas. Nowadays, the modern doctors do not mention any diet that should be followed when taking medicine to get rid of illness. The traditional Siddha doctors suggest diet that should be followed while taking medicines. Tamil siddhar's have given some methods that should be followed while taking medicines. Thus, this article is about those methods that are mentioned in the book '7000' by Bogar.

**Keywords:** Medicines, Bogar Siddhar's, Powers, Astrology, yoga, Wisdom

## முன்னுரை

ஆன்மீக இயக்கங்களைச் சார்ந்தவர்கள் மக்களின் நலன் கருதிப் பல்வேறு துறைகளிலும் அருந் தொண்டாற்றியவர்கள் சித்தர்கள். இவர்கள் மருத்துவம், மாந்திரீகம், சோதிடம், யோகம், ஞானம், இரசவாதம் முதலிய பலதுறைகளில் அரிய நூல்கள் பலவற்றைப் படைத்துள்ளனர். ஆன்மநேய ஒருமைப்பாட்டுக் கொள்கையையும் வலியுறுத்தியவர்கள். இவ்வியக்கத்தில் குறிப்பிடத்தக்க பங்குவகிப்பவர் போகர். "7000" எனும் நூல் வழி இவரது அரிய கருத்துக்கள் தரப்பெற்றுள்ளன.

## மூலிகைப் பொருள்

மருத்துவத்திற்குப் பயன்படும் பொருள்கள் பலவகைப்படும். இயற்கையில் கிடைக்கும் பொருளும் பல வகையான பிரிவுகள் கொண்டதாக இருக்கும். இயற்கையாக இருக்கும் தாவரங்களும் அவற்றில் இருந்து கிடைக்கும் பொருள்களும், மருந்துக்குப் பயன்படும் மூலிகைப் பொருள்களாகும். போகர் ஏழாயிரத்தில் 'சுமார் 400 மூலிகைப் பொருள்கள்' பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

## அனுபானம்

மூல மருந்து நன்கு செயல்பட ஒரு துணைப்பொருளும் அதனுடன் சேர்த்துக் கொடுப்பர். அது திடமாகவும் இருக்கலாம், திரவமாகவும் இருக்கலாம். மூல மருந்தையும் திசை மாற்றும் வல்லமை

இந்த அனுபானத்திற்கு உண்டு, எந்த நோய்க்கு எந்த மூல மருந்தும், துணைப் பொருளும் சேர்த்துக் கொடுக்க வேண்டும் என்ற வரையறை உண்டு. சில நோய்க்குச் சில அனுபானம் பொருந்தாமல் இருக்கும். அவற்றை அறிந்து நல்ல முறையில் செயல் பட்டால் நோய் விரைவில் குணமாகும். அனுபானத்தின் சிறப்பை,

"அனுபானத் தாலே யவிழ்தம் பலிக்கும்

இனிதான சுக்கு கன்ன லிஞ்சி - பினு முதகங்

கோமயம் பால் முலைப்பால் கோ நெய்தேன் வெற்றிலைநீர்

ஆமிதையா ராய்ந்து செய்ய லாம்"

என்று தேரையர் வெண்பா கூறும் (Subramanian, 1983).

"மூல வியாதி வலிகுன்ம முளைத்த நொச்சிச் சாற்றிலும்

சூலை வலிக்கு முருங்கை மரத்துற்ற பட்டைச் சாற்றிலும்

கயத்து வகைகள் பத்துக்கும் காண்வெள் ளாட்டுப் பாலினிலும்

வயத்து நோய்களாந் தீர வருந்திப்பத்தியமாகக் கொள்க"

என்று கூறுவதால் அறியலாம் (Thiyagarajan, 1971).

"போகர், 'பசும் வெண்ணெய்' 'நெய்' 'பால்' 'சூரணம்' 'லேக்கியம்' 'கிரதம்' 'இஞ்சிரசம்' 'முலைப்பால்' 'சர்க்கரை' 'முட்பன்றி நெய்' இவற்றை அனுபானமாகப் பயன்படுத்தி இருக்கிறார"3. மேலும் அனுபானம் சேர்க்கவேண்டிய அளவையும் கூறுகின்றார் (Subramanian, 1983)

## மருந்துண்ணும் போது நீக்க வேண்டியவை

நோய் நீங்க மருந்துண்ணும் காலத்தில் சிலபொருள்களை உண்ணக் கூடாது. அப்பொருள்கள் நோய் நீங்க உதவி செய்யாது இருப்பதுடன், மருந்தின் ஆற்றலுக்கும் ஊறு செய்வதாக அமையும்.

"இலவணம் புளிகடுவெண் ணாலு முதலாக

வொவொரு குணமா யொழிவாய் - நவிலிறைச்சி

கூழ்ப்பாண்ட மச்சம் பெண் கோத்திரங் கொள் பிரமபத்ரி

தீழ்ப்பாகு மெத்தவிது சீ"

என்று தேரையர் வெண்பா என்னும் நூலில் கூறப்படுகிறது. மேலும், "கொள்ளு, காடி, குமட்டிக்காய், கொம்புப் பாகல், முத்திரை அவரைக்காய், காராமணிக்காய், சேப்பங்கிழங்கு. வள்ளிக்கிழங்கு. பாலைக்கீரை, மாங்காய், இளநீர், மாதுளன், மாச்சிற்றுண்டி, புளி, கடுகு, தேங்காய், எருமைநெய், ஷபால், கிழங்குகள், முப்பழங்கள், பெருங்காயம், வெங்காயம்மூ"5 என்பனவும் ஆகாது என நீக்கும்படி கூறுகின்றார் (Devar, 1948).

புகை, குளிர்ச்சியான நீரில் குளித்தல் இவற்றையும் நீக்க வேண்டும் என்பர். எந்த நோய்க்கு, எந்த மருந்து கொடுக்கும் போது, எப்படி இருக்க வேண்டும் என்ற வரைமுறையும் கொண்டு செயல்பட்டார்கள்.

"உண்ணவே கற்பத்துக் குறிதி கேளு

உப்பாகா புளியாகா பொண்ணுமாகா

கண்ணவே துவர்ப்பாகா மோருமாகா

கசிந்தயெளளு நல்லெண்ணெய் சுண்ணாம்பாகா

விண்ணவே நித்திரையின் சோம்பலாகா

வேறான மாங்கிசங்கள் மச்சமாகா

பண்ணவே சுடுகுள்ளி காயமாகா

பலபலவாஞ் சிந்தையெல்ல மறுத்துத் தள்ளே"

என்று போகர் மருந்து உண்ணும் காலங்களில் நீக்க வேண்டுவன யாவை எனப்பட்டியல் போட்டுக் காட்டுகின்றார் (Ramaiyar Pogar, 2005).

## மருந்துண்ணும் போது சேர்க்கும் பொருள்கள்

மருந்து உண்ணும் போது சில பொருள்களை உடன் சேர்த்துக்கொள்வர். அப்படிச் சேர்த்துக் கொள்ளும் பொருள் மருந்துக்குத் துணையாகவும், உணவுப் பொருளாகவும் அமைவதுண்டு. "பொன்னாங்காணி, சிறுகீரை, பசுநெய், கோவை, சுண்டை முதலியவற்றல்கள் அவரைப் பிஞ்சு, அப்பைக் கோவைக்காய், வெள்ளைப்பூண்டு, முருங்கைப் பிஞ்சு, பனிப்பயிறு, மாவடு, அத்திப்பிஞ்சு, கருவாழைக் கக்சல், பூ, மாம்பருப்பு" என்பனவும், "முருங்கைப் பிஞ்சு, கத்திரிப் பிஞ்சு, துவரம் பருப்பு, சிறு பயறு, வெள்ளாட்டு உப்புக் கண்டம், பசுவின் மோர், பசுவின் நெய் என்பனவும் ஆகும்"8 என கூறுகின்றார் (Hahkim Muhammed Abdulla, 1971).

மருத்துவர் சொல்லும் இயல்புக்கு ஏற்ப நடந்தால், நோய் விரைவில் நீங்கவும், சுகம் பெறவும் வழி கிடைக்கும். போகர் மருந்துண்ணும் காலத்தில் உண்ண வேண்டியவை எவை என்பதை ஒரு பட்டியல் போட்டுக் காட்டுகின்றார்.

"தள்ளியே யுண்ணுகிற பத்தியத்தைக் கேளு

சார்பாக நெய்யாகும் பாலுமாகும்

அள்ளியே சிறுபயறு முருங்கையாகு

மப்பனே வெள்ளாட்டுக் கரியுமாகும்

துள்ளியே தூதுவளை யிலை காயாகுஞ்

சுண்டெலியாங் கவுதாரி காடையாகும்

பள்ளியே பழமாகும் பழுவெல்லாந்

தேனாகும் பான மாமே

ஆமப்பா சிறுகீரை யரைக்கீரையாகும்

அதிதமாம் புளியாரை நல்லாரையாகும்

போமப்பா பொன்னி நல்லாங்காணியாகும்

புளிப்பான நெல்லிக்காய் வூற்காயாகும்

தேமப்பா வழுதலங்காய்ப் பீர்க்கங்காயாகுங்

சிறப்பான முசலாகு மூர்க்குருவியாகும்

வாமப்பா மரையாகு மானுமாகும்

வகையாக இப்படிதான் பத்தியமாயுண்ணே"

என்று போகார் எல்லையிட்டுக் கூறி இருக்கிறார் (Ramaiyar Pogar, 2005).

மருந்துண்ணும் காலத்தில் அதனால் ஏற்படுகின்ற வேறுபாடுகளைக் கண்டு, அதற்கு ஏற்ப நடக்க வேண்டும். சில நேரங்களில் மருந்துண்ணுவதை நிறுத்த வேண்டும். சில நேரம் மருந்தின் வேகம் தணிய வேறு உபபொருள்கள் உண்ண வேண்டும்.

"உண்ணுறது ஒரு சேரை யரிசியப்பா

உத்தமனே ஒருபொழுது வெந்நீர்கொள்ளு

பண்ணுறதோர் மருந்துகளில் காந்திகொண்டால்

பசுவின்பால் ராக்கால மொருசேர் கொள்ளு

விண்ணுறது வுள்ளமுட மெல்லாம்பாரு

வேதாந்த வாலைத்தான் நித்தம் பூசி

அண்ணுறது குருபதத்தையடுத்து நித்தம்

அடுக்கடுக்க யுண்ணுகிற கற்பங்கேளே"

என்று போகர் விளக்கம் கொடுக்கின்றார் (Ramaiyar Pogar, 2005).

மருந்து உண்ணும்போது சில மருந்துகள் நல்ல முறையில் பக்குவம் பெறாத இயல்பில் அமைந்துவிடும். அவ்விதம் அமைந்த மருந்துகள் நோயைப் போக்கும் வல்லமை கொண்டதாக அமையாது. மேலும் அம்மருந்தின் குற்றத்தை நீக்கவும் வழி அறிந்து இருந்தார்கள்.

"இரும்பு முதலிய உலோகங்களாகிய பற்பம், செந்தூரம். மாத்திரை என்னும் இவைகளால் நேர்ந்த தோங்கட்கு, அயபற்பம் அயச் செந்தூரம் இவைகளாலும்,

பாசண பற்பம், செந்தூரம், மாத்திரை என்னும், இவற்றால் நேர்ந்த தோசங்கட்கு, லவணச் செந்தூரம், பற்பம் முதலியவைகளாலும் மற்றைச் சரக்குகளால் நேர்ந்த தோசங்கட்கு மிளகுக் குடிநீராலும் அனுபானத் திரவியங்களால் நேர்ந்த தோசங்கட்கு இஞ்சிச் சாற்றினாலும் குடிநீர் வகையால் நேர்ந்த தோசங்கட்கு, உத்தாமணிச் சமூலச் சாற்றினாலும், பானங்களால் நேர்ந்த தோசங்கட்கு, தேனினாலும் நிவாரண முண்டாம்" என்பர் (Ramaiyar Pogar, 2005).

## முடிவுரை

போகர் ஏழாயிரத்தில் மருந்துக்காக மூலிகைகள், உலோகம். காரசாரம், பாடாணம், உபரசம், நவமணி, சூதம், சீவ வகுப்பு, வைப்புச் சரக்கு, வேதை, செயநீர், திராவகம், அனைத்தையும் பயன்படுத்தியதாகக் காணப்படுகிறது. கனிமப் பொருள்கள், நஞ்சுகள், சாரங்கள் ஆகியவற்றைச் செம்மையான காயகற்ப மருந்தாக ஆக்கும் அறிவைப் பெற்றிருக்க வேண்டும். பாசண பற்பம், செந்தூரம், மாத்திரை என்னும், இவற்றால் நேர்ந்த தோடங்கட்கு, இலவணச் செந்தூரம், பற்பம் முதலியவைகளாலும் மற்றைச் சரக்குகளால் நேர்ந்த தோடங்கட்கு மிளகுக் குடிநீராலும் அனுபானத் திரவியங்களால் நேர்ந்த தோடங்கட்கு இஞ்சிச் சாற்றினாலும் குடிநீர் வகையால் நேர்ந்த தோடங்கட்கு, உத்தாமணிச் சமூலச் சாற்றினாலும், பானங்களால் நேர்ந்த தோடங்கட்கு, தேனினாலும் நிவாரணமுண்டாகும்

## References

Devar, S.S. (1948) Palporut Gunanool, Saiva siddhantha Noorpathippu Kazhagam, Chennai, India.

Hahkim Muhammed Abdulla, (1973) Raja Vaithiya Magudamenmum theraiyar aruli seitha yamaga vemba, Siddha Maruthuva Kazhagam, Chennai, India.

Ramaiyar Pogar, (2005) Pogar eazhalariyam kaandam, Sakthi Nilaiyam, Chennai, India.

Subramanian, S.V. (1983) Heritage of siddha medicine, Keelavu, International Institute of Tamil Stuides, Chennai, India.

Thiyagarajan, R. (1974) Theraiyar Vemba Mollamum Uraiyum, Pandiatha S.S. Anandham Pathippu, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License